# யாழ். விசேஷ துப்புத்துலக்கும் பிரிவு தனித்து இயங்கும்

UNIVERSITY OF SRI LANKA CAMPUS
RECEIVED
1978-1-18
PERIODICALS DIVISION
LIBRARY

பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANAADU

மலர் 19 தை 5 ஸபர் 8 இதழ் 339
யாழ்ப்பாணம் புதன்கிழமை 18-1-78




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விசேட துப்புத்துலக்கும் பிரிவு 'ஏ-1' ஆக தரம் உயர்த்தப்பட்டு தனியாக இயங்கவிருக்கிறது. இப்பிரிவு புறம்பான கட்டடத்தில் இனிமேல் செயல்படும்.

உதவி பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்று யாழ்ப்பாணத்தில் கூட்டிய மாநாட்டில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் இதேபோன்று 25 துப்புத்துலக்கும் பிரிவுகள் புறம்பாக இயங்கவிருக்கிறது. இப்பிரிவின்கீழ் குற்றத்தடுப்புப்பிரிவு, விசேட குற்றத்தடுப்புப் பிரிவுகள் இனிமேல் இயங்கும்,

தரம் உயர்த்தப்பட்ட இப்பிரிவிற்கும், பொலிஸ்நிலையத்திற்கும் தொடர்பு இருக்காது. இப்புதிய பிரிவு உதவிப் பொலிஸ் அதிபர் திரு செனரத்ன தலைமையில் இயங்கும். இன்ஸ்பெக்டர் கே பத்மநாதன் துப்புத்துலக்கும் பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாக இருப்பார்.

திருட்டுப்பொருள்களை அடையாளம் காட்டுதல், கைரேகை அடையாளம் போன்றவை

(6-ம் பக்கம் பார்க்க)

# 'மும்மொழித்திட்டத்தின் மூலம் சிங்களத் திணிப்பு

## அச்சம் தெரிவிக்கிறார் 'அமிர்'

### இந்தியா கண்ட தோல்விபற்றியும் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

"மும்மொழித்திட்டம் மூலம் சிங்களத்தை இலகுவாகத் தமிழ்மக்களிடையே புகுத்த, புதிய கல்வி அமைச்சர் முயற்சிகள் மேற்கொண்டுள்ளார், மும்மொழித்திட்டப் போர்வையில் வரும் சிங்களத் திணிப்பை நாம் இறுதிவரை எதிர்த்தே தீருவோம். தமிழ்ப்பெற்றோரும் கடுமையாக எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அ அமிர்தலிங்கம் அறைகூவல் விடுத்துள்ளார்

பெரியவிளான் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் புதிய கட்டிடமொன்றை நேற்றுமுன்தினம் திறந்து வைத்துப் பேசுகையிலேயே திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

பங்குக்குரவர் அருட்திரு ஆர். ஜோசவ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழாவில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது;

"வாரத்தில் 3 பாடங்களை இதற்காக ஒதுக்கவேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் பெற்றோர் விரும்பினால் மட்டுமே இத்திட்டம் அமுல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'1956-ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னர் தமிழ்மக்கள் சிங்களத்தைக் கற்க மறுத்தனர். கல்லூரி அதிபர்கள் ஒன்றுசேர்ந்து சிங்களம் கற்பிப்பதை எதிர்த்தார்கள். தனிச் சிங்களச்சட்டம் மாற்றப்படாது என்று பிரதமர் கூறியுள்ளார். இந்நிலையில் மும்மொழித்திட்டம் என்ற போர்வையில் வரும் சிங்களத்தை, தமிழ்ப்பெற்றோர் ஏற்றுக்கொள்ளாது பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும்,

### இந்தியாவில் நடந்தது என்ன?

"இந்தியாவில் 1960-ம் ஆண்டு, இதேபோல மும்மொழித் திட்டமொன்றை 'கோதாரி கமிஷன்' சிபார்சு செய்தது. ஹிந்திபேசும் மக்கள் தென்னிந்திய மொழிகளில் ஒன்றையும், தென்னிந்திய மக்கள் ஹிந்திமொழியையும் கற்கவேண்டும் என்ற இக்கமிஷனின் சிபார்சு நடைமுறைப்படுத்தப்பட்டபோது, வட இந்தியாவிலுள்ள ஹிந்திமொழி பேசுவோர் தாங்கள் பெரும்பான்மை இனமாக இருப்பதினால் ஏன் சிறுபான்மை இன மொழியொன்றை கற்கவேண்டும் என்று பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் அத்திட்டம் தோல்வி அடைந்தது.

### சிங்கள மக்கள் தமிழ் படிப்பார்களா?

"நமது நாட்டிலும் தனிச் சிங்களச் சட்டம் நடைமுறையில் இருக்கும்போது மும்மொழித் திட்டத்தின்கீழ்

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ் புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கு

## யாழ். றோட்டரிக் கழகம் 40,000 ரூபா நன்கொடை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண றோட்டறிக் கழகம், களியாட்ட விழா மூலம் பெற்ற தொகையில் 40,000 ரூபாவை யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவிருக்கும் புற்றுநோய் சிகிச்சை நிலையத்திற்கு ஒதுக்கியுள்ளது.

இத்தொகை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கியில் நிலையான சேமிப்பு வைப்புப்பணக் கணக்கில் போடப்பட்டுள்ளது.

இந்த ஒழுங்குமூலம் பெறப்படும் நியாயமான தொகை வட்டிப் பணமும் மேற்படி நிதிக்குச் சேருமென்ற நோக்கத்துடனேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதென்றும், புற்றுநோய் சிகிச்சை நிலையத்திற்குரிய வேலைகள் ஆரம்பிக்கப்படும்போது முழுத்தொகையும் புற்றுநோய்ச் சிகிச்சை நிறுவனசபையிடம் ஒப்படைக்கப்படுமென்றும் யாழ். றோட்டறி கழகத் தலைவர் திரு. ஆர். ஜே. குணரத்தினம் தெரிவித்துள்ளார்.

## பங்கீட்டுப்புத்தக பரிசீலனை: நாடுபூராவும் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

நாடு முழுவதும் இன்று அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்கள் பரிசீலனைசெய்யும்வேலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் ஆரம்பமாகும்.

இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் இவ்வேலை இம்மாதம் 26-ம்திகதிவரை நடைபெறும்.

[6-ம்பக்கம் பார்க்க]

# வாடகை அதிகரிப்புக்கு வணிகர் சங்கம் எதிர்ப்பு!

## இன்று கொழும்பில் விசாரணை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண நவீன சந்தைக் கடைகளின் வாடகை 50 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதற்கு இலங்கை வணிகர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

வணிகர் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் திரு. ஏ. சங்கரப்பிள்ளை, உள்ளூராட்சி அமைச்சுக்குச் செய்த புகாரைத் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

உள்ளூராட்சி மேலதிகச் செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம் இந்த விசாரணையை நடத்திவருகிறார். கொழும்பில் இன்று நடைபெறும் விசாரணைக்கு திரு. சங்கரப்பிள்ளையும், யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு கே. சிவஞானமும் அழைக்கப்பட்டுள்ளனர்.

கண்டியில் உள்ள நவீன மார்க்கட் கடைகளுக்குக் குறைவான வாடகையே அறவிடப்படுவதாகவும், கடைகளின் இரும்புக் கதவுகள் மற்றும் மின் விளக்குகள் கடை உரிமையாளர்களாலேயே போடப்பட்டுள்ளதாகவும், 72ம் ஆண்டு கடைகளைப் பெறும்போது குறிப்பிட்ட தொகைப் பணம் மாநகரசபைக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும், கடந்த 5 வருடங்களில், வாடகை மூலம் நவீன சந்தை கட்டிய செலவிலும் பார்க்கக் கூடியளவு பணத்தை, சபை பெற்றுவிட்டதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பஸ்நிலைய

# 27 கடைகள்: நாளை திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு எதிரில் கட்டப்பட்டுள்ள 27 கடைகளைக் கொண்ட புதிய கட்டடம், நாளை திறந்துவைக்கப்படவிருக்கிறது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு கே. சிவஞானம் நாளை நண்பகல் 12 மணிக்கும் 1-30 மணிக்குமிடையில், சம்பிரதாய முறைப்படி இக்கட்டடத்தைத் திறந்துவைப்பார்.

கடை உரிமையாளர்கள், இக்கட்டடத் திறப்பு விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்கள்.

இக்கட்டடம் 3 மாத காலத்திற்குள் கட்டிமுடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(முன் வந்த செய்தி 2-ம் பக்கம் பார்க்க)

வலி. வடக்குப் பகுதியில்

## 60 ப.நோ.கூ.ச.கிளைகளில் பங்கீட்டுகூப்பன்கள் பரிசிலனை

[மாவிட்டபுரம்]

வலி - வடக்குப் பகுதியில் உள்ள 60 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இன்று முதல் பங்கீட்டுக் கூப்பன்கள் பரிசீலனை செய்யப்படும்.

இதற்காக வலி-வடக்கு உதவி [illegible] அதிபர் திரு. கே [illegible] கூட்டிய மாநா[illegible] கியோகத்தர்களுக்கு [illegible] அளிக்கப்பட்டது.

வலி-வட[illegible]பர் மேற்

(6 [illegible])

### யாழ். பஸ். நிலையத்தில்

# இருபத்தேழு கடைகளும் உரிமையாளரிடம் ஒப்படைப்பு!

## இம்மாத இறுதிக்குள் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திற்கு முன்பாக புதிதாக கட்டப்பட்டுள்ள 27 கடைகளும், கடை உரிமையாளர்களிடம் நேற்றுமுன்தினம், யாழ். மாநகர சபையினால் பாரம் கொடுக்கப்பட்டது.

இக்கடைகள் யாவும் இம்மாத இறுதிக்குள் திறக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்பொழுது கடை உரிமையாளர்கள் தளபாடங்கள் போட்டு, கடைக்குள்ளே தேவையான திருத்தவேலைகளை செய்துவருகின்றார்கள்.

ஆகஸ்ட் கலவரத்தின்போது இக் கடைகள் யாவும் எரிந்து சாம்பலாகின. மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் உடனடியாக அமைச்சருடன் தொடர்புகொண்டு இக் கடைகளை புதிதாக கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுத்தார்.

பழைய மார்க்கட் பகுதியில் கலவரத்தின்போது எரிந்த 104 கடைகளும் மூன்று பிரிவாகக் கட்டப்பட்டுவருகிறது. ஒரு பகுதி வேலை முடிந்துள்ளது மற்றும் இருபகுதி வேலை இம்மாத இறுதிக்குள் முடிவடைந்துவிடும் என எதிர் பார்க்கப்படுகிறது.

அடுத்தமாதம் முதல்வாரத்தில், இக் கடைகளும், உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது.

பஸ்நிலையத்திலுள்ள 27 கடைகளும் பழைய மார்க்கட்டிலுள்ள 104 கடைகளும், 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளது. [ஈ]

### மட்டு எம். பி. திரு. இராசதுரை விவகாரம்:

# "கூட்டணித் தலைமைப்பீடம் நிலைமையை தெளிவாக்கவேண்டும்"

## பூநகரி த. இ. பே. செயலாளர் அறிக்கை

[பூநகரி]

மட்டக்களப்பு எம். பி.யும், தந்தை செல்வாவின் சிரேஷ்ட சீடர்களில் ஒருவருமான திரு. செ. இராசதுரையின் அண்மைக்கால அரசியல் போக்கு தமிழ் இளைஞர்களைப் பொறுத்தவரை வேதனைக்குள்ளாக்கியுள்ளது. கூட்டணியின் தலைமைப்பீடம் இனியும் மௌனம் சாதிக்காமல் உண்மை நிலையை மக்களுக்கு வெளியிடவேண்டும்.

பூநகரி பகுதி தமிழ் இளைஞர் பேரவை செயலாளர் திரு. அ. க. வாமதேவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: தந்தை செல்வா காலத்திலிருந்தே, எத்தனையோ எதிர்ப்புக்கு மத்தியிலும், தமிழரசுக் கட்சியினை கட்டி வளர்க்க ஆற்றிய அருஞ்சேவையினையும், அவர் அனுபவித்த கஷ்டங்களையும், தமிழ்மக்கள் நன்கு உணர்வர்.

இப்படிப்பட்ட ஒருவர் இன்றைய இக்கட்டானநிலையில், கூட்டணி நடவடிக்கைகளிலிருந்து விலகி மௌனமாக இருப்பது ஆழ்ந்த கவலையையும், அதேநேரத்தில் ஆச்சரியத்தையும் அளிக்கின்றது. எனவே இதுபற்றி தமிழ்மக்கள் மத்தியில் பல கோணங்களில் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. அவர் இப்படி நடப்பதற்கு தமிழர் விடுதலை கூட்டணி தலைமைப்பீடம் தவறு செய்திருந்தால், தவறு செய்யக் காரணமாக இருந்தவர்களையும், அல்லது அதற்கான காரணங்களை கூட்டணி தலைமைப்பீடம் பகிரங்கப்படுத்த வேண்டும்.

தவறு நடந்திருந்தால் இதற்குக்காரணமாக இருந்தவர்கள் தமிழ்மக்கள் நலன் கருதி தந்தை செல்வாவின் லட்சியத்தை முன்வைத்து பகிரங்க மன்னிப்பு கோருவதன்மூலம், சுமுகமாக பிரச்னையை தீர்க்க முன்வரவேண்டும்.

தமிழ்மக்கள் இன்றுள்ள நிலையில் ஒரே அணியை ஒரே தலைமையையே விரும்புகின்றனர். அறிஞர் அண்ணாவின் தம்பிகள் எனக்கூறிய இருவர் இன்றுபடும் சர்ச்சைகளை பார்த்து பிறர் கைகொட்டிச் சிரிக்கும்நிலை, தந்தை செல்வாவழி வந்த தலைவர்கள் எவரிற்கும் ஏற்படக்கூடாது.

தந்தை செல்வாவிற்கு அமைக்கும் நினைவாலயத்தை விட அவர் சேர்த்துதந்த ஒற்

(5-ம் பக்கம் பார்க்க)


### திருமண அழைப்பு

மணமகன்: ப. சிறீதரன் (யூ. கே)
மணமகள்: சி. பத்மினி
இடம்: 19, யாழ்வீதி, யாழ்ப்பாணம்
காலம்: 20-01-1978 வெள்ளிக்கிழமை
நேரம்: மாலை 5·45 முதல் 7-15 வரையுள்ள சுபநேரம்

உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நா. சிவானந்தன், திருமதி தி. சிவானந்தன், 4, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.
ப. கனகராஜா, திருமதி இ. கனகராஜா, 19, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
8236

### திருமண அழைப்பு

மணமகன்: திருநிறை செல்வன் ஜனார்த்தனன்
மணமகள்: திருநிறை செல்வி கிருபாமலர்
முகூர்த்தம்: 20-01-78 வெள்ளிக்கிழமை இரவு 10-11 மணி முதல் 10-59 மணி வரை
இடம்: கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம்
வரவேற்புபசாரம்: 21-01-78 சனிக்கிழமை மாலை 4-00 மணி முதல் மணமகனில்லத்திலும் 22-01-78 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணி முதல் மணமகளில்லத்திலும் நடைபெறும்.

உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனித்தனி அழைப்பாக ஏற்க வேண்டுகின்றோம்.

அன்புடன்

டாக்டர் செ. சஙாரத்தினமும் (காங்கேசன்துறை ஈஸ்வரி வைத்தியசாலை) பாரியாரும் (மணமகனின் பெற்றோர்) "மங்களகோட்டம்" கருகம்பானை, காங்கேசன்துறை.
திரு வி. நாகரத்தினமும் பாரியாரும் (மணமகளின் பெற்றோர்) "லிங்கஸ்தான்", கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.
8229

### நியமனம்

யாழ். மத்திய கல்லூரி

1. பௌதிகவியல், இரசாயனவியல், கணிதம் ஆகிய பாடங்களைக் கொண்ட **இரு பட்டதாரிகள்**
2. மேல் நாட்டுச் சங்கீதம் கற்பிக்கத் தராதரமுடைய **ஓர் ஆசிரியர்**

உடனடியான நியமனத்திற்குத் தேவை. அதிபருக்கு விண்ணப்பிக்கவும்.

8238 அதிபர்

வெளிவந்துவிட்டன

**40 கட்டுரை மஞ்சரி**
உயர்தர வகுப்புக்குரியது - G. C. E. O/L

**20 கட்டுரை மஞ்சரி**
6-ம் 7-ம் வகுப்புக்களுக்குரியது
எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

### முக்கிய அறிவித்தல்

எமது நிறுவனத்தில் தற்போது திரு. சி. த. சுப்பிரமணியம் என்பவர் கடமையாற்றவில்லை என்பதையும், எவராவது எமது சார்பில் அவரோடு செய்து கொள்ளும் கொடுக்கல் வாங்கல் எதற்கும் நாமோ எமது நிறுவனமோ பொறுப்பேற்க முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**வே. க. இராசலிங்கம் அன் சன்**
**கனகலிங்கம் சுருட்டுத் தொழிற்சாலை**
"வசந்தம்", மானிப்பாய்.
8235

## வரி விளம்பரம்

### தேவை

பழைய புத்தகங்கள், கொப்பிகள், சோதனைப் பேப்பர்கள் உடன் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய இடம் அண்ணா தொழிலகம், இணுவில். 8191

மரத்தில் சித்திர வேலை செய்யும் சிற்பாசாரியாரும், சித்திர வேலை பழக விரும்புபவர்களும் தேவை. பரம்பரை வேலையாட்கள் விரும்பத்தக்கது. விபரங்கட்கு: ஆறுமுகம் சிற்பாலயம், காளி கோவிலடி, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம். 8212

பொன் அம்பர், மீன் அம்பர் எதுவானாலும் கூடிய விலை கொடுத்து வாங்கிக்கொள்வோம். விபரங்களுக்கு:- கே. ஆ. எம். ஜூவலர்ஸ், 67, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 286, அன்ட் 7536. 8181

பல் வைத்தியசாலைக்கு ஒரு பெண் 35-40 வயதுக்குள். நேரில் வரவும். டாக்டர் வி.ரி. பெர்ணான்டோ, பல் வைத்தியசாலை, 11, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 8232

### விற்பனைக்கு

"ஒலிவ் ஸ்நானப் பவுடர்" எண்ணெய் முழுக்குக்கு சிறந்தது. தலைமயிரிலுள்ள அழுக்கு பிசான், சொடுகு, பேன் ஆகியவற்றை நீக்குகிறது. மில்க் வைற்-யாழ்ப்பாணம். 8218

நல்லூர் செட்டித்தெரு குறுக்குவீதியிலுள்ள 1½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பரப்பு 13000/- விபரங்கட்கு; 43, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். 8225

### விற்பனைக்கு

காணி- 6½ பரப்பு - கொக்குவில் ஸ்ரேசன் ரோட்டில். இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் விற்பனைக்குஉண்டு. தொடர்பு கொள்ளவும்: பொ. சின்னத்துரை, 160, கே.கே.எஸ். வீதி, குளப்பிட்டி கொக்குவில். 8226

போட் அங்கிலியா மொடல் (Goods) வான் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. உடனே தொடர்பு கொள்ளவும். பரமேஸ் கோணேஸ் புரடக்ஷன்ஸ், 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 8228

### பயிற்சி

வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor Technology) சிற்றி அன்ட் கில்ட்ஸ், PMG Certificate (General & Special) வெளிநாட்டு முறையில் பயிற்சிகள். கல்வி அமைச்சினால் தனியார்துறைதொழிற் பயிற்சிநிலையமென அத்தாட்சி பெற்ற ஸ்தாபனம். விசேட சனி, ஞாயிறு வகுப்புகளும் நடாத்தப்படுகின்றன. National Institutes 128, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம். 8186

பொறியியல் துறையில்வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெறும் இளைஞர்களுக்கு தரமான 30 வருடகால சேவையுள்ளவர்களால் பயிற்சியளிக்கப்படுகின்றது. இங்கு கல்வி பயிலும் மாணவர்களுக்கு அரசாங்க மூலமாக வெளிநாடு செல்வதற்கு எமது நற்சாட்சிப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும். எலெக்ரிக் வெல்டிங், எலெக்ரிக் வயறிங், மோட்டார் மெக்கானிக்கல், மோட்டார் வைன்டிங், மோட்டார் பிளம்பிங் ஆகிய துறைகளில்பயிற்சி அளிக்கப்படும். விபரங்களுக்கு: ஜெகஜோதி என்ஜினியரிங் இன்ஸ்டியூட் 47 1/3, மும்லாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 8224

### யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

## கேள்வி அறிவித்தல்

எமதுசங்கத்தில் பின்குறித்த விடயங்களுக்கு கேள்வி மூலம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) களஞ்சிய அறை நிர்மாணித்தல்.
(2) மின்தறி உதிரிப்பாகங்கள் செய்தல். (Power Loom Spare Parts)
(3) கழிவு நூல் விற்பனை.

விண்ணப்ப முடிவு திகதி: 24-1-1978.

மேலதிக விபரங்கட்கு சங்கக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

கு. பெ. இராசரத்தினம்
பொதுமுகாமையாளர்
74/3, அல்பிரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
1978 ஜனவரி 17.
8237


## இடமாற்றம் ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. பி. கனகசபாபதியின் இடமாற்றம், காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [ஈ]

## ஈழநாடு
The Eelanaadu

# பாதுகாப்புக் கமிஷன்

சிறுபான்மையோர் பாதுகாப்புக் கமிஷன் ஒன்றை இந்திய அரசு நியமித்துள்ளது.

சிறுபான்மையின மக்களுக்குப் பேரதிய பாதுகாப்பு அளிப்பதே இக் கமிஷன் அமைக்கப்பட்டதன் நோக்கம் என இந்திய அரசு தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது:

மொழி, மத அடிப்படையில் சிறுபான்மையோருக்கு இழைக்கப்படும் அநீதிகளை இக்கமிஷன் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

சிறுபான்மையோரிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் பாகுபாடுகளைக் களையவும் இக் கமிஷன் முயலும் எனவும் இந்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உலகில் அதிக ஜனத்தொகையைக் கொண்ட மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. அங்கு பல மொழிகள் பேசும் பல இன, மதமக்கள் வாழ்கின்றனர்கள்.

மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஓரளவு சுயாட்சி வழங்கப்பட்டுள்ளது. அந்தந்த மாநிலங்களில் அந்தந்த மாநில மக்களின் தாய்மொழியே ஆட்சி மொழியாக இருக்கின்றன.

இந்தியே இந்தியாவின் உத்தியோக மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளபோதிலும் இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை அவர்கள் மீது இந்தி வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படமாட்டாது என்று அன்றே அமரர் பண்டித ஜவஹர்லால் கொடுத்தஉறுதிமொழி இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது.

சிறுபான்மையினர் ஒருவர் இந்தியாவில் ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் பதவிவகிக்க முடியும். ஜனாதிபதி, உபஜனாதிபதி பதவிகளை சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வகித்துவந்துள்ளனர்.

சகலருக்கும் சமஉரிமை என்பது இந்திய அரசியல் அமைப்பிலேயே இடம் பெற்றிருக்கிறது.

சிறுபான்மையினருக்கு இத்தனை உரிமைகளும் சலுகைகளும் வழங்கப்பட்டிருந்தும் அங்கும் நிர்வாக ரீதியிலும் நடைமுறைகளிலும் சிறுபான்மையினருக்குச் சில சந்தர்ப்பங்களில் பாகுபாடு காட்டப்படுகிறதென்பது பொதுவான குற்றச்சாட்டு.

இக் குற்றச்சாட்டை இந்திய அரசு தட்டிக்கழித்து விடாமல்சிறுபான்மையோர் பாதுகாப்புக் கமிஷன் ஒன்றை நியமித்துள்ளது அதன் ஜனநாயகப் பண்புக்கும் பெருந்தன்மைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்தியாவுக்குள்ளது போன்ற பிரச்னைகள் இலங்கைக்கு இல்லை.

இலங்கையின் ஜனத்தொகையும் பரப்பளவும் இந்தியாவுடன் ஒப்பிடுகையில் மிகமிகக் குறைவு, இங்குள்ள பிரச்னைகளையும் இந்தியாவுடன் ஒப்பிட முடியாது.

அப்படியிருந்தும் இன்னும் கூடஇங்குசிறுபான்மையினர் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணமுடியவில்லை. சிறுபான்மையினரின் குரல் ஆட்சிபீடத்துக்கு வருவோரின் செவிகளில் ஏறுவது கூடக்கிடையாது.

இந்தியாவின் முன்மாதிரியை இதுவரை பின்பற்றத் தவறிவிட்டாலும் தார்மீக ஆட்சியை நிலைநாட்டத் துடிக்கும் இன்றைய அரச வது பின்பற்றுமென்று எதிர்பார்ப்போம்.

# "மும்மொழித்திட்ட அமுல்: ஒருபோதும்விடமாட்டோம்"

## காரைநகரில் 'அமிர்'

(வட்டுக்கோட்டை)

"இன்றைய அரசின் மும்மொழித்திட்டத்தை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம். இத்திட்டத்தை நடைமுறைப் படுத்த நாம் ஒருபோதும்விடமாட்டோம். சுதந்திர தமிழ் ஈழக் கொள்கையிலிருந்து நாம் இம்மியும் விட்டுக்கொடுக்க மாட்டோம்"

மேற்கண்டவாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் சொன்னார்.

காரைநகர் வியாவில் சனசமூக நிலையத்தினர் நடத்திய பொங்கல் விழாவில் திரு. அமிர்தலிங்கம் பேசினார். இவ்விழாவில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வட்டுக்கோட்டைத் தொகுதி வேலைகளை கவனிக்கின்றேன் என்றும் அத்தொகுதிக்கு வரும் நியமனங்களையோ வேறு சிபார்சுகளையோ நானே செய்கின்றேன் என்றும் சிலர் கூறித்திரிகிறார்கள். இது தவறு எனக்கு எனது தொகுதி வேலைகளை கவனிக்கக்கூட நேரமில்லாது இருக்கும்போது நான் ஏன் வட்டுக்கோட்டைத் தொகுதி வேலைகளைக் கவனிக்கப்போகின்றேன்.

'நீங்கள் திறமையான ஒருவரை உங்கள் தேசியப்பேரவை உறுப்பினராகத் தெரிவுசெய்துள்ளீர்கள். அவரே உங்கள் தொகுதி வேலைகளைச் சிறந்த முறையில் செய்துவருகிறார். எனக்கும் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கும் எதுவிததொடர்பும் இல்லை. உங்கள் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவே உங்கள் தொகுதி வேலைகளைக் கவனிப்பார்."

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பேசுகையில்,

'நாம் பேச்சைக் குறைத்துச் செயலில் இறங்கவேண்டும். நாம் ஒவ்வொரு கூட்டங்களிலும் மேடைகளிலும் பேசிவிட்டுப் போவதில் தமிழ் ஈழமோ சுதந்திரமோ தமிழர்களுக்குக்கிடைக்காது. ஆகவே பேசுவதைக்குறைத்து எதையும் செயலில் அமுல்படுத்த நடவடிக்கை யெடுக்கவேண்டும் தமிழ் மக்களின் பிரச்னைக்குத் திருப்திகரமான முறையில் தீர்வுகாணப்படும்வரை நாம் தொடர்ந்து போராடிக் கொண்டேயிருக்கவேண்டும்' என்று கூறினார்.

திரு. வி. பொன்னம்பலம், ஈழவேந்தன், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. மு. சபாரத்தினம், திரு. எஸ். பரமசிவம், திரு. க. சிவமணி உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். [அ]

# உடுப்பிட்டியிலும் சீட்டிழுப்புமூலம் நியமனம்

[நெல்லியடி]

உடுப்பிட்டித் தொகுதி ஆசிரியர் நியமனத்தில் விண்ணப்பதாரர்களின் வேண்டுகோளைத் தொகுதி எம். பி. திரு. க. இராசலிங்கம் ஏற்றுக்கொண்டார்.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவு அடிப்படையில் சீட்டிழுப்பு மூலம் நியமனத்திற்கு உரியவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென விண்ணப்பதாரிகள் தே. அ. பே. உறுப்பினரிடம் கேட்டுக்கொண்டனர். இதனை எம். பி. ஏற்றுக்கொண்டார். [அ]

ஆசிரியருக்குக் கடிதம்

# குறைதீருமா?

திருநெல்வேலிக் கிராமத்தில் தபால் விநியோகம் தாமதமாகவே நடைபெறுகிறது. எமது தபால் விநியோகப் பகுதியின் விஸ்தீரணம் அதிகமாகவுள்ளதே இதற்கு காரணமெனத் தெரிகிறது. இதனால் பல முக்கியமான கடிதங்களும், மற்றும் நேர்முகப்பரீட்சை போன்றவற்றிற்கான அறிவித்தல்களும் பி. ப. 2-00 மணியளவில் தான் எமக்குக்கிடைக்கின்றன. காலை 9-00 மணிக்கு நேர்முகப்பரீட்சை என குறிப்பிட்டுவரும் கடிதங்கள் அன்றைய தினம் பி. ப. 2-00மணியளவில் தான் கிடைக்கின்றன. இதனால் மக்கள் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள்.

இத்தபால் விநியோகப் பகுதிக்கு மேலும் ஒரு தபால் சேவகர் ஒருவரை வேலைக்கமர்த்தி இதற்கான ஒழுங்கு நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் மேற்கொள்வார்களா?

வி. ரி. ராஜேந்திரா
திருநெல்வேலி.

# ரஸிக ரஞ்சனசபா 27-வது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்]

யாழ். ரஸிக ரஞ்சன சபாவினது, 27-வது ஆண்டு இசைவிழா, 20-ந் திகதிமுதல் நடைபெறவுள்ளது. இவ்விழா தொடர்ந்து 10 தினங்கள் யாழ். ரஸிக ரஞ்சன சபா விநாயகர் மண்டபத்தில் நடைபெறும்.

விழாவின் முதலாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. எஸ். சிவஞானமும், இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு யாழ்ப்பாண நீதிமன்ற நீதிபதி திரு. கே. வி. நவரட்ணமும், மூன்றும் நாள் நிகழ்ச்சிக்கு யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கமும், நாலாம் நாள் நிகழ்ச்சிக்கு வட்டுக்கோட்டை தே. பே. உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசும், ஐந்தாம் நாள் நிகழ்ச்சிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் திரு. சின்னையா சிவனேசனும், ஆறும் நாள் நிகழ்ச்சிக்கு யாழ். வளாக துணைவிரிவுரையாளர் திருமதி ஞானா குலேந்திரனும், ஏழாம் நாள் நிகழ்ச்சிக்கு மன்னார் தே. பே. உறுப்பினர் திரு. பி.எஸ். சூசைதாசனும், எட்டாம் நாள் நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாணம் தே பே உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரனும், ஒன்பதாம் நாள் நிகழ்ச்சிக்கு நல்லூர் தே. பே. உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரமும், இறுதிநாள் நிகழ்ச்சிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் தலைமைதாங்குவர்.

நிகழ்ச்சிகள் மாலை 5-30மணி முதல் 10-30 மணிவரை நடைபெறும். [செ]

# "இ. போ. ச. ஊழியர்கள் மக்களுக்குச் சேவையாற்ற உறுதிசெய்வோம்"

(நெல்லியடி)

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் இத்திருநாளிலே, உழவர் பெருமக்களுக்கும் உழைக்கும் தொழிலாளிகளுக்கும் இ. போ. ச. பருத்தித்துறை டிப்போவினரான நாம் எம்மாலான சகல உதவிகளையும் சேவைகளையும் செய்யத் திடசங்கற்பம் பூணவேண்டும்.'

மேற்கண்டவாறு பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ முகாமையாளர் திரு. பி. யூ. ம..லிங்கம் டிப்போவில் நடைபெற்ற பொங்கல் விழாவிற்கு தலைமை தாங்கிப் பேசுகையில் கூறினார்:

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'வளர்ந்துவரும் நாடுகளில் குறிப்பாக ஆசிய ஆபிரிக்க நாடுகளில் போக்குவரத்துச் சேவையின் அத்தியாவசியத்தை உணர்ந்த அரசாங்கங்கள் அதற்கான முயற்சிகளை எடுத்து வருகின்றன. இலங்கை அரசாங்கமும் தேவையான பஸ் வண்டிகளை இறக்குமதி செய்ய நடவடிக்கைகள் எடுத்துள்ளது. அந்நியச் செலாவணிப் பிரச்சினை பாரதூரமானதாக இருந்த போதும் அரசு உழவர்க்கும் தொழிலாளிகளுக்கும தரமான சேவையை அளிக்கவே இந்நடவடிக்கையை எடுத்து வருகின்றது. நாமும் விவசாயிகளின் நலனைக்கொண்டே கரவெட்டியூடாக கொடிகாமம், தனுக்காய், நாயாறு போன்ற சேவைகளையும் நடாத்தி வருகின்றோம். இதனை உணர்ந்து எமது டிப்போ ஊழியர்கள் யாவரும் இவ்வகையில் தமது பங்கினைச் செலுத்துமாறு வேண்டுகின்றேன்'

தொழிற்சங்கப் பிரமுகர்கள் திரு. ஏ. சந்தசாமி, வி. கணபதி ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர். [அ)

## மணிவாக்கு

எதையும் கட்டாயமாக்குவது சரியல்ல. நல்ல விஷயமாக இருந்தாலும் கூட பலவந்தமாகத் திணிக்கமுயன்றால் அதனை எதிர்ப்பதென்பது மனிதனின் இயற்கை சுபாவமாகும்.

— மொரார்ஜிதேசாய்.

## நாடும் நடப்பும்

மேயர் துரையப்பா உயிருடன் இருந்தபோது அதிகாலையிலேயே அவர் வீட்டில் ஜனக்கூட்டம் நிற்கும். அவரும், வந்துநிற்பவர்கள் ஒவ்வொருவரையும் அழைத்து அவர்களுடைய குறைகளை அறிந்து ஒவ்வொருவருக்கும் தகுந்த ஆலோசனைகூறி செய்யக்கூடிய உதவிகளையும் செய்து அனுப்புவார்.

காலை 6 மணிமுதல் எட்டரை மணிவரை வீட்டில் நிரும் மக்களைச் சந்தித்தபின் மாநகர சபைக்குச் சென்றால் அங்கேயும் மக்கள் கூட்டம். இப்படிச் செல்லுமிடமெல்லாம் அவரை மக்கள் கூட்டம் மொய்த்துக்கொள்ளும்.

மேயர் துரையப்பாவுடன் இந்த மக்கள் கூட்டம் முடிந்துவிடவில்லை.

இப்போது யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் வீட்டில் காலை முதல் இரவுவரை இந்தக்கூட்டத்தைக் காணலாம்.

திரு. துரையப்பாவைச் சந்திக்கச் சென்ற கூட்டம் வீட்டின் அறைகளுக்குள் நுழைவதில்லை; தொலைபேசியை எடுத்துத் தமது இஷ்டப்போல் பாவிப்பதில்லை; வெளியே நின்று ஒருவர் ஒருவராகச் சந்தித்துப்பேசுவார்கள்.

திரு. யோகேஸ்வரனின் அறைக்கதவில் ஒவ்வொருவராகச் சந்திக்கவும்என்று அறிவித்தல் எழுதப்பட்டிருந்தாலும் எம். பி.யைச் சூழ்ந்து கும்பலாகநின்று, பாடசாலையில் பிள்ளைக்கு அட்மிஷன் கேட்பது தொடக்கம் மனைவியின் பிரசவத்துக்கு ஆஸ்பத்திரி டாக்டரின் கரிசனையான கவனிப்பைப் பெறுவதற்கான சிபாரிசுவரை கேட்கிறார்கள்!

தொலைபேசி மணி ஒலித்தால் அங்கு போய் நிற்பவர் தான்தான் எம். பி. என்ற நினைப்பில் பதில் சொல்லிவிடுவார்.

பாவம் யாழ்ப்பாணம் எம். பி.

0 0 0

நாடக அரங்கக் கல்லூரி ஒன்று யாழ்ப்பாணத்தில்ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இப்படியொரு கல்லூரி தொடங்கப்படுவது இலங்கையின் சரித்திரத்தில் இதுதான் முதல் தடவை.

திரு. ம. சண்முகலிங்கம் அனுப்பியுள்ள அழைப்பிதழில் "கலைகள் அனைத்தும் சங்கமிக்கும் க்ஷேத்திரமாக விளங்கும் நாடகத்தின்பால் தாங்கள் கொண்டுள்ள பற்றினை நாமறிவோம். நெறிமுறை நின்று அக்கலை வளர நாம் ஒரு நாடக அரங்கக் கல்லூரியை ஆரம்பிக்கிறோம்.

ஆரம்பவைபவம் 23-1-78 திங்கட்கிழமை மாலை4மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில்நடைபெறும்" என்று கூறுகிறது.

நல்ல முயற்சி.

0 0 0

அமரர் கவிஞர் நாகராசனின் சகோதரி கு. பரமேஸ்வரி குடும்பத்தின் பத்துக் கூப்பன்களும் தொலைந்து விட்டதாம். மிகவும் கஷ்டப்படுகிறார்கள். யாராவது கண்டெடுத்தால் அவர்களிடம் சேர்த்து விடுங்கள். பெரும் புண்ணியம்.

# பொங்கல் கரோல்

(அரியாலை)

அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையத்தின் பொங்கல் கதம்ப கரோல் கோஷ்டியினர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இல்லங்களுக்குச் சென்று கதம்ப நிகழ்ச்சிகளை நடாத்தினர். [அ]

# ஆயிரம்ரூபாநோட்டுக்கள் இந்தியாவில் செல்லாது!

## ஜனாதிபதி அவசரச்சட்டம்

புதுடில்லி, ஜன. 17

**இந்தியாவில் புழக்கத்திலுள்ள ஆயிரம் ரூபா, 5 ஆயிரம் ரூபா, 10 ஆயிரம் ரூபா நோட்டுக்களை இந்திய அரசு செல்லுபடியற்றதாக்கியுள்ளது.**

இதற்கான அவசர சட்டம் ஒன்றை இந்திய ஜனாதிபதி திரு. நீலன் சஞ்சீவரெட்டி கடந்த இரவு பிறப்பித்தார்.

நேற்று திடீரென இரகசியமாக நடைபெற்ற இந்திய அமைச்சரவையின் கூட்டத்தின் பின்னரே இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

ஆயிரம், 5ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் நோட்டுக்களைவைத்திருப்போர் இன்றும் நாளையும் றிசேர்வ் வங்கிகளிலும் அரச வங்கிகளிலும் மாற்றிக் கொள்ள வேண்டுமென்றும் அரசு அறிவித்துள்ளது.

இவ்வாறு உயர் பெறுமதியுள்ள நோட்டுக்களை மாற்றிக் கொள்ள விரும்புபவர்கள், அவற்றை மாற்றும்போது அவை எங்கிருந்து- எப்போது- எவ்வாறுகிடைத்தனஎன்பதை விபரமாக எழுத்துமூலம் வங்கிகளுக்கு அறிவித்த பின்னரே மாற்றிக் கொள்ளமுடியுமென்றும் அரசு அறிவித்துள்ளது.

நாட்டில் புழக்கத்திலுள்ள 100 கோடிக்கும் 200 கோடிக்கும் இடையேயான பணத்தை கணக்கிடும் பொருட்டே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் அரசு அறிவித்துள்ளது.

நாட்டில் புழக்கத்திலுள்ள பெருந்தொகைப்பணம். சட்ட விரோதமாகப் பயன்படுத்தப்பட்டு தேசிய பொருளாதாரத்திற்குக் குந்தகம் விளைவிக்கப்படுகிறது. எனவே இதைத் தடைசெய்யும்பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றும் அரசு அறிவித்துள்ளது.

பெரும்கோடீஸ்வரர்களினால் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பெருந்தொகைப் பணத்தை வெளிக்கொணரவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிகாரிஒருவர் தெரிவித்தார். (இ)

# எம்ஜிஆர்-சவான் மகிழ்ச்சி!

சென்னை, ஜன. 17

"ஆயிரத்துக்கு மேற்பட்ட ரூபா நோட்டுக்களை என்றோ செல்லுபடியற்றதாக்கியிருக்க வேண்டும். எனினும் இப்போதாவது மத்திய அரசு இதைச் செய்துள்ளது."

இவ்வாறு தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் அரசின் புதியதிட்டம்பற்றி கருத்துத் தெரிவித்துள்ளார்.

அரசின் புதியசட்டம்குறித்து தாம் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளதாகவும் திரு. எம். ஜி இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

**சவான் கருத்து**

ஆயிரத்துக்கு மேற்பட்ட ரூபா நோட்டுக்களுடன் 50, 100 ரூபா நோட்டுக்களையும் செல்லுபடியற்றதாக்கியிருந்தால் அதிகபயன்கிட்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் திரு வை.பி. சவான் கருத்துத்தெரிவித்துள்ளார். (இ)

# 'பசுவும் கன்றும்' யாருக்கு?

## தேர்தல் அதிகாரி விசாரணை

புதுடில்லி, ஜன. 17

இந்திய காங்கிரஸின் தேர்தல் சின்னமான 'பசுவும் கன்றும்' சின்னத்துக்கு பிளவுபட்ட இரண்டுகாங்கிரஸ்குழுக்களும் உரிமை கோரியுள்ளன.

இச்சின்னத்துக்கு உரிமைகோரி தலைமை தேர்தல் அதிகாரிக்கு இந்திரா கோஷ்டியும், ரெட்டிகோஷ்டியும் தனித்தனியாக விண்ணப்பித்துள்ளன.

இந்த விண்ணப்பங்கள்பற்றி தலைமைத்தேர்தல் அதிகாரி திரு. எஸ் எல். சக்தார் இன்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளார். (இ)

# பீம்சிங் காலமானார்

சென்னை, ஜன. 17

தென்னிந்திய திரைப்பட டைரக்டரும் தயாரிப்பாளருமான திரு. ஏ. பீம்சிங் நேற்று சென்னையில் காலமானார்.

சுமார் 50 தமிழ், ஹிந்தி மலையாளப்படங்களை டைரக்ட் செய்த பீம்சிங்கின் படங்களுக்கு ஒருகாலத்தில் பெரும் புகழ் இருந்துவந்தது தெரிந்ததே.

54 வயதான இவர் நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார். [இ]

......

# கிரெம்ளின் வெள்ளை மாளிகைகளுக்கு இடையே நேரடித் தொடர்பு

வாஷிங்டன், ஜன. 17

அமெரிக்க வெள்ளை மாளிகைக்கும் ரஷ்ய கிரெம்ளின் மாளிகைக்குமிடையேநேரடி தொலைபேசித் தொடர்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்தொலைபேசித் தொடர்பு செய்மதி ஊடாக நடைபெறுகிறது.

முதல் தடவையாக ஏற்படுத்தப்பட்டுள்ள இத்தொடர்பினால் பல முக்கிய விடயங்களை இருநாட்டுத் தலைவர்களும்உடனுக்குடன் பரிமாறிக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. [இ]

# 1-ம் நுற்றுண்டு நாணயங்கள் கண்டுபிடிப்பு

றபாத், ஜன 17

கிறிஸ்துவுக்கு முன் 1-ம் நூற்றுண்டு காலத்தவை எனக் கருதப்படும் பெருந்தொகையான புராதன ரோம தங்க, வெள்ளி நாணயங்கள் மொரொக்கோவிலுள்ள தங்ஜியர் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப் பிரதேசத்திலுள்ள ஒரு விவசாயி தனது வயலினை உழுதுகொண்டிருக்கும்போதே இந்தவகையான 500 நாணயங்களைக் கண்டுபிடித்தார். (இ)

.......

## எகிப்து-இஸ்ரேல் பேச்சுவார்த்தை:

# கார்ட்டர் பெகினுக்கு விசேட செய்தி!

## வான்ஸ் கொண்டுவந்தார்

ஜெரூஸலம், ஜன. 17

மத்திய கிழக்கு அமைதி குறித்து எகிப்து-இஸ்ரேல் பேச்சுவார்த்தைகள் தொடர்பான அமெரிக்க அதிபரின் விசேடசெய்தியுடன் இஸ்ரேல் வந்த அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் திரு சைரஸ்வான்ஸ் இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகினிடம் கையளித்தார்.

இன்று ஜெரூஸலத்தில்ஆரம்பமாகும் எகிப்திய- இஸ்ரேலிய அமைதிப் பேச்சுவார்த்தைகளிலும் திரு. வான்ஸ் எகிப்திய- இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர்களுடன்கலந்துகொள்வார்.

மத்திய கிழக்கு அமைதிக்கு அமெரிக்கா தம்மாலான சகல உதவிகளையும் செய்யத்தயாராக இருக்கிறது என்றும் திரு. வான்ஸ் இஸ்ரேலியப் பிரதமரிடம் கருத்துத் தெரிவித்துள்ளார். (இ)

# தமிழில் 'புனர்ஜன்மம்'

மாஸ்கோ, ஜன. 17

லியோ டால்ஸ்டாயின் உலகப் புகழ் பெற்ற நாவலான "புனர் ஜன்மம்" இந்த ஆண்டு நடுப்பகுதியில் தமிழில் வெளியாகவுள்ளது.

இவ்வாண்டு செப்டம்பரில் டால்ஸ்டாயின் 150 வது ஜனன தினம் கொண்டாடப்படவுள்ளது. இதன் நிமித்தமாகவே "புனர் ஜன்மம்" நாவலை தமிழில் வெளியிடுவதற்கான தயாரிப்புகளில் மாஸ்கோ "புரோகிரஸ்" பிரசுராலயத்தினர் ஈடுபட்டுள்ளனர். ]இ[

## கான்ஸ்டபிள் மரணம்:

# மற்றொரு சந்தேகநபரும் சரண்

[நெல்லியடி]

பருத்தித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் மரணம் சம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிசாரினால் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் ஒருவரான த. இந்திரலிங்கம் என்பவர் சட்டத்தரணி திரு. என். கிருஷ்ணராசா சகிதம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் சரண் அடைந்துள்ளார். இவரை எதிர்வரும் 20-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இம்மரணம் சம்பந்தமாகத் தேடப்பட்ட மற்றொரு சந்தேக நபர் ஏற்கனவே மல்லாகம் நீதிமன்றத்தில் சரணடைந்து பருத்தித்துறை நீதிபதியின் உத்தரவின் பேரில் றிமாண்டில் இருந்து வருகிறார். [அ]

# பலாத்கார வழக்கு: விசாரணை ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

8 வயது சிறுமியை பலாத்காரம் செய்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சாட்சிகள் வராததினால் ஒத்திவைக்கப்பட்டது.

இவ் வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அத்துல்காதர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் பெரியவிளானில் 76-ம் ஆண்டு ஜூலை 18ம் திகதி தியாகராசா ரஞ்சினி என்ற சிறுமியை பலாத்காரம்செய்ததாக, குசை எட்வேட் அல்லது செல்லன் 18 வயது என்ற வாலிபர்மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிர்சார்பில் சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு, சட்டத்தரணி எஸ். சுரேந்திரன் ஆகியோர் ஆஜரானார்கள். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். ஐ. கனகரத்தினம் ஆஜரானார். விசாரணை மார்ச் 2-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

# பொங்கல் விழா

[அச்சுவேலி]

அச்சுவேலி பத்தமேனிஇளங்கதிர் சனசமூக நிலையத்தினர் பொங்கல் விழாக் கொண்டாடினர்.

திரு. எம். பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் செ. முத்துலிங்கம், பொன் ஸ்ரீ ஜீவகன், பாரதி மோகன் ஆகியோர் உரையாற்றினர். [அ]

# வெளிநாடுகளில் 490,000 யு. எஸ். துருப்புக்கள்

வாஷிங்டன், ஜன. 17

தற்போது வெளிநாடுகளிலுள்ள அமெரிக்கத் துருப்புக்களின் தொகை 490,000ஆக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது 1976ல் வெளிநாடுகளிலிருந்த அமெரிக்கத் துருப்புக்களின் எண்ணிக்கையைக்காட்டிலும் இது 27,000 அதிகமானதாகும்.

இத் துருப்புகளில் 224,300 மேற்கு ஜேர்மனியிலும், 20,000 பிரிட்டனிலும், 11,400 இத்தாலியிலும், 9,200 ஸ்பெயினிலும் 48,000 ஜப்பானிலும் 16,000 தென் கொரியாவிலும் நிலைகொண்டுள்ளன. (இ)

...

# கணேச ச.ச.நி. நிர்வாகிகள்

(தெல்லிப்பளை)

பன்னாலை சனசமூக நிலைய 27வது வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் சி.சிவபாலசுப்பிரமணியம், உபதலைவர் க.மகேஸ்வரன், செயலாளர் ச. திருஞானசம்பந்தர், உபசெயலாளர் சு. ககிர்காமநாதன் பொருளாளர் பொ. ஜெகநாதன் 5 பேர்கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவாகினர்.

...

# மதுவெறியர் நடமாட்டம் குறைந்தது

[நெல்லியடி]

பருத்தித்துறை பொலிசார் எடுத்துவரும் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளினால் வடமராட்சிப் பகுதியில் குறிப்பாக நெல்லியடிப் பகுதியில் மதுவெறியில் நடமாடுபவர்கள் தொகை குறைந்துள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி திரு கே.குணரத்தினம், சார்ஜண்ட் செ. மாணிக்கராஜா ஆகியோர் தலைமையில் தீவிரகண்காணிப்பில் பொலிசார் ஈடுபட்டு வருகின்றார்கள். [அ]

# யாழ். நகரில் வாக்கர்ஸ் பிரதிநிதிகள்

[யாழ்ப்பாணம்]

வாக்கர்ஸ் நிறுவனத்தின் தலைமை அலுவலக விற்பனைப் பிரதிநிதிகளான திருவாளர்கள் எஸ். ஆர். இமாம், பி. இராஜரத்தினம் ஆகியோர் தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து புதிய பாவித்த லொறிகளை வாங்க விரும்புபவர்களுக்கு ஆலோசனையும் உதவியும் வழங்கி வருகிறார்கள்.

# வலி-வடக்கு உதைபந்தாட்ட போட்டிகள்

]மாவிட்டபுரம்[

வலி.வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு விழாவை யொட்டி நடைபெறும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் மயிலிட்டிகண்ணகை விளையாட்டுக்கழகமும் காங்கேசன்துறை குரு விளையாட்டுக்கழகமும் மோதிய போட்டியொன்றில் மயிலிட்டி கண்ணகை 6-1 கோல்களால் வெற்றிபெற்றது.

தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்கும் மல்லாகம் மத்திய விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடந்த போட்டியில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் 6-0 கோல்களால் வெற்றியீட்டியது.

காங்கேசன்துறை யங்ரோயல் விளையாட்டுக்கழகத்தினரும் அளவெட்டி புளூபேட்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவிருந்த போட்டியில் புளூபேட்ஸ் கோஷ்டியினர் கலந்துகொள்ளாததினால் யங்ரோயல் கோஷ்டிக்கு வெற்றி வழங்கப்பட்டது

தெல்லிப்பழை திருமகள் கோஷ்டிக்கும் வசாவிளான் மின்மீன் கோஷ்டிக்குமிடையில் நடந்த விறுவிறுப்பான போட்டியில் வசாவிளான் கோஷ்டி 2-0 கோல்களால் வெற்றி பெறஇருந்த நிலையில் இறுதிநேரத்தில் வெளிச்சமின்மையால் போட்டி ஒத்திவைக்கப்பட்டது.

இப்போட்டிகள் காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் நடைபெற்றன. [இ]

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 2-30, 6-30, 9-30
ஏ.வி.எம் ராஜன்
தாய்க்கு ஒரு பிள்ளை

RIO (Jaffna) Tel: 7607
Daily Packed Houres
See it Before you Late
MISTRESS PAMELA
(Adults only)

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
சிவாஜி-சாவித்திரி
சரஸ்வதி சபதம்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30
அன்பைத்தேடி

Regal (Jaffna) The star of born free In a new adventure
Daily at 4-45, 7-00 & 9-00 p. m.
RING OF BRIGHT WATER
(Color)

இப்பொழுது அரங்கு நிறைந்து காண்பிக்கப்படுகிறது.
சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
புரட்சி நடிகர் எம். ஜி. ஆரின்...
அரசிளங்குமரி (புத்தம்புதிய பிரதி)
கதைவசனம்: மு. கருணாநிதி

ராணி வி. பி. கணேஷன் — சுபாக்ஷினி
ராம்தாஸ் — ஜெனிட்டா நடித்த
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் [illegible]

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெமகணேஷ்
மூத்தான முத்தல்லவோ

விடோ எம். ஜி. ஆர். லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்.நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ராஜா ஜெய்சங்கர், வாணிஸ்ரீ, நாகேஷ்
(யாழ்ப்பாணம்) நடித்த
"அவசரக் கல்யாணம்"
(புதிய பிரதி)
இத்துடன் அமரர் தந்தை செல்வாவின் இறுதி யாத்திரைக் காட்சியும் காண்பிக்கப்படும்.
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு!

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜக்கம்மா
(புதிய பிரதி)


# ரூ. 23 ஆயிரம் செலவில் புதிய கட்டிடம்

[குருநாகல்]

குருநாகல் தமிழ் மகாவித்தியாலயத்தில் இவ்வாண்டு முதலாம் வகுப்பில் சேரவிருக்கும் பிள்ளைகளுக்கான இடவசதியை முன்னிட்டு 23,000 ரூபா செலவில் புதிய கட்டிடம் ஒன்று நிறுவப்படுகிறது. பெற்றோர் ஆசிரிய சங்கப் பொறுப்பில் நடைபெறும் இக்கட்டிட வேலைகளை அதிபரும் பெ. ஆ. ச. தலைவருமான திரு. மு. இராமலிங்கம் கவனித்து வருகிறார். இம்மாத முடிவுக்குள் கட்டிட வேலைகள் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. [அ]

—

# புதியதமிழ் திரைப்படம் 'தாலி'

[கொழும்பு]

யாழ். கலைவாணர் நாடக மன்றம் கொழும்பு கலாஸ்டேஜ்கூட்டுத் தயாரிப்பான "தாலி" திரைப்படத்தின் ஆரம்பபூஜை அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

ஒலிப்பதிவாளர் ஜனாப். எம். ஏ கபூர் படத்தொகுப்பாளர் ஜனாப் எம் எஸ். அலிகான் கதாசிரியர் திரு. பி. எஸ். நாகலிங்கம் முன்னாள் இலங்கை வானொலி அறிவிப்பாளர் திரு. பி. மயில்வாகனன் உட்படப்பலர் இவ்வைபத்தில் கலந்து கொண்டனர்.

படத்திற்கான நடிக நடிகையர் தெரிவு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விரைவில் படப்பிடிப்புகள் ஆரம்பமாகவுள்ளன. [ம]

......

# ஆணையாளருக்கு பாராட்டும் நன்றியும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாநகரசபையின் அங்கீகாரம் பெறுமல் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைகளுக்குள் அமைக்கப்படும் புதிய கட்டிடங்கள் வீடுகளுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ள யாழ் மநகரசபை விசேஷ ஆணையாளர் திரு க. சிவஞானத்திற்கு யாழ். மக்கள் துறைமுகத்தொழிலாளர் பொதுச்சேவைக்கூட்டுறவுச் சங்கம் பாராட்டுத்தெரிவித்துள்ளது.

சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் திரு. யோ. அன்ரனி தம்து பாராட்டில் தெரிவித்துள்ளதாவது குருநகர் புதிய வீடமைப்புக்குடியேற்றத் திட்டத்தில் வசிப்பவர்களாகிய நாம் எமக்கு அருகில் உள்ள கடற்கரையோரத்தில் கருவாடு, கட்லட்டை போன்றவற்றைக் காயப்போடுவதனல் பெரும் கஷ்டத்திற்குள்ளாவதுடன் எமது சுகாதாரத்திற்குப் பங்கமும் ஏற்படுகிறது அத்துடன் போக்குவரத்துக் கிடைஞ்சலும் ஏற்படுகின்றது.

இவ்விடங்களில் அமைக்கப்பட்டுள்ள கொட்டில்களினல் வெள்ளம் கடலுக்குச் செல்ல முடியாதவாறு தடுக்கப்படுவதோடு குழிமலசலகூடங்கள் நிரம்பி சுகாதாரக்கேடும் ஏற்படுகிறது. இதனல் இத்தகைய சட்டவிரோத கட்டிடங்கள் வீடுகள் முதலியவற்றுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதன்மூலம் பாதிக்கப்படும் நம்து பகுதி மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என நம்புகின்றேன். இந்நடவடிக்கையை மேற்கொண்டிருக்கும் யாழ். விசேஷ ஆணையாளர் திரு. க. சிவஞானத்திற்கு சங்கம் தனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது. [கா-அ]

# துப்பாக்கி முனையில் ரூ. 45ஆயிரம் நகைகொள்ளை

## மகரகம அடைவு கடையில் சம்பவம்

(கொழும்பு)

துப்பாக்கிமுனையில் அடைவு கடை முதலாளியை பயமுறுத்திய இரண்டு இளைஞர்கள் 45ஆயிரம் ரூபாபெறுமதியான நகைகளையும் 2 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துள்ள சம்பவம் ஒன்று மகாகமவில் நடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணிபோல் கடையின் முன்புறவாசலினல் நுழைந்த இரண்டு இளைஞர்களும் துப்பாக்கிமுனையில் முதலாளியை பயமுறுத்தியதை அடுத்து முதலாளி பணமிருந்த லாச்சியையும் நகைப்பெட்டியையும் திறந்துவிட்டாராம். இதைத்தொடர்ந்து இளைஞர்கள் பணத்தையும் நகைகளையும் கொள்ளையடித்துச்சென்றுள்ளனராம்.

இக் கொள்ளை தொடர்பாக நிமல்பெரேரா என்பவரையும் அவருடன் கொள்ளையிடச் சென்றவரையும் பொலிசார் தேடிவருகின்றனர். [இ]

# மணிவாசகர் சபை சமயப்பரீட்சை

[வட்டுக்கோட்டை]

ஈழத்துச் சிதம்பரம் திருவாதிரை உற்சவத்தின் போது மணிவாசகர்சபையினர் நடாத்திய சமயபாடப் பரீட்சையில் சித்தியடைந்தோர் களுக்கான சான்றிதழ்கள் இம்மாத இறுதிக்குள் காரைநகரிலுள்ளசகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது. இப்பரீட்சையில் 75புள்ளிக்குமேல் எடுத்த மாணவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாக மணிவாசகர்சபை செயலாளர் திரு க. சிவகுமாரன் தெரிவித்தார். (அ)

......

# ஓய்வுபெறுகிறார்

(அரியாலை)

யாழ்ப்பாணம் பண்ணை காசநோய் வைத்தியசாலையில் காசநோய் நிபுணராகவும், பிரதம வைத்தியராகவும் பணியாற்றிய வைத்தியகலாநிதி எஸ். மகேந்திரன் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

யாழ்ப்பாணம் ரோட்டரிக் கழகத்தின் உபதலைவராகவும், சமூக சேவையாளராகவும் விளங்கும் இவர் கூடிய விரைவில் வெளிநாட்டில் மிக உயர்ந்த பதவியொன்றைப் பெற்று வெளிநாடு செல்லவிருக்கிறார். (அ)

......

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இரத்தினக்கல் பற்றிய பயிற்சி வகுப்புக்க ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

இதுதொடர்பான கருத்தரங்கு ஒன்று இன்று மாலை யாழ்ப்பாணக் கல்வி நிலையத்தில் நடைபெறும். (இ)

......

# கூட்டணி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

றுமையை கட்டிவளர்ப்பதே' தலைவர்கள் செய்த கைமாறுக இருக்கவேண்டும். இவ்விவகாரத்தை தமிழ் இளைஞர்பேரவை தலைமைப்பீடம், சுமுகமாக தீர்த்துவைக்க முன்னிற்க வேண்டும். [க]

......

# பட்டம் ஏற்றுவிழா

[நெல்லியடி]

பருத்தித்துறை இந்து இளைஞர்சங்கத்தால் பொங்கலன்று பருத்தித்துறை கடற்கரையில் நடாத்தப்பட்ட பட்டம் ஏற்றும் விழா பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. பி வேலும்மயிலும் தலைமையில் நடைபெற்றது. பிரதமவிருந்தினராக வடமாநில வித்தியாதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியதுடன் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களையும் வழங்கினர்.

வெற்றி பெற்றோர் விபரம்: மு துரைராஜா, எஸ். ஆனந்தகுமார். எம். ஜெயானந்தன். [அ]

...

# நாட்டுக்கூத்து ஒலிப்பதிவு

[அரியாலை]

இலங்கை வானொலி நாட்டுக்கூத்து ஒலிப்பதிவுக் குழுவினர் அடுத்தமாதமுற்பகுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்கள். அமைப்பாளர் திரு. அ. தாசிசியஸ் தலைமையில் வரும் இக்குழுவினர் அரியாலை மேற்கு காந்திசனசமூக நிலையத்தின் சார்பில் அரியாலையூர் அண்ணாவி திரு. சி. சின்னையாவினல் நெறிப்படுத்தப்பட்ட 'சகாதேவன் சபதம்' என்னும் கதைவழிக்கூத்தையும், அண்ணாவி கா மதியாபரணத்தினல் நெறிப்படுத்தப்பட்ட 'குசலவன்' நாட்டுக்கூத்தையும், முத்தமிழ்ச் செல்வன் கலைமணிதேசிகர் திரு. மு. இராமநாதனல் பாடப்பட்டு, அரியாலையூர் அண்ணாவி திரு. சி. சின்னையாவினல் நெறிப்படுத்தப்பட்ட "அருச்சுனன் தபசு" என்ற நாட்டுக்கூத்தையும். கோண்டாவிலைச் சேர்ந்த அண்ணாவி திரு. நா. செட்டியாரால் நெறிப்படுத்தப்பட்ட இந்திரகுமாரன்" என்ற நாட்டுக்கூத்தையும் ஒலிப்பதிவு செய்யவிருக்கிறார்கள்.

ஒலிப்பதிவுக்கு திரு கே எஸ் வாசகர் பொறுப்பாக இருப்பார். இன்னும் இவை போன்ற பல நாட்டுக்கூத்துகள் ஒலிப்பதிவுசெய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. [அ]

......

# பொலிஸாருக்கு பயிற்சி

[மாவிட்டபுரம்]

பொலிஸார் பொதுமக்களுடன் எவ்வாறு பழகுவது என்பது குறித்து காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் பொலிஸாருக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. சில்வாவினல் இப்பயிற்சி ஒழுங்கு சய்யப்பட்டிருந்தது.

ஸ்ரீராம ஜெயம்

# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றிச் சீட்டுகளின் விபரம்

யாழ்ப்பாணம்
ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமாள் கோயில்

இக்கோயில் இராஜகோபுரத் திருப்பணிக்குப் பக்தர்களுக்கிடையில் 14-1-78ல் கோயில் முன்றலில் நடைபெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசுகள் பெற்ற வெற்றிச் சீட்டுகள்;

மேற்படி திருப்பணிக்குப் பண உதவி செய்யுமாறு அன்பர்கள் வேண்டப்படுகின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| 1 | R 11 | 2 | N 369 |
| 3. | F 973 | 4. | P 139 |
| 5. | A 64 | 6 | L 388 |
| 7. | Q 156 | 8 | M 441 |
| 9. | 984 | 10. | J 22 |
| 11. | P 769 | 12. | F 259 |
| 13. | F 806 | 14. | O 551 |
| 15. | N 261 | 16 | V 102 |
| 17. | Q 476 | 18. | W 80 |
| 19. | C 700 | 20 | A 67 |

## 'பெல்பொட்டம்' வாலிபர்கள் அரங்கேற்றி

# தோல்வி கண்ட துணிகர நாடகம்!

(யாழ்ப்பாணம்)

'பெல்பொட்டம்' அணிந்த மூன்று வாலிபர்கள் துப்பாக்கி முனையில் கார் ஒன்றைக் கடத்திச்சென்று தங்கள் திட்டத்தை நிறைவேற்ற பல இடங்களிலும் நோட்டம் பார்த்து நிலைமை தங்களுக்கு சாதகமில்லை என்று தெரிந்ததும், காரை சாரதியிடம் ஒப்படைத்துவிட்டு தலைமறைவாகிவிட்டனர்!

இச்சம்பவம் பற்றி காங்கேசன் துறைப் பொலிஸாருக்கு புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

அச்சுவேலியைச் சேர்ந்த ஆழ்வான் இராசதுரை என்பவர் தமது காரில் வருத்தக்காரர் ஒருவரைக் கொண்டு போய் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதித்துவிட்டுத் திரும்பும்போதே இச்சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வழியில் மூன்று வாலிபர்கள் துப்பாக்கிமுனையில் காரை மறித்து, சாரதியைக் கட்டி கார் டிக்கிக்குள் போட்டுவிட்டு காரைக் கடத்திச் சென்றதாக கூறப்படுகிறது.

சிலமணித்தியாலத்தின் பின்னர் கார் கடத்தப்பட்ட அதே இடத்தில் சாரதியை டிக்கியிலிருந்து வெளியே தூக்கி கட்டுகளை அவிழ்த்து காரை அவரிடம் ஒப்படைத்தனராம்.

''திட்டம் ஒன்றும் சரிவரவில்லை. யாருக்கும் இதைப் பற்றிச் சொல்லக்கூடாது. சொன்னால் ஆபத்து'' என்று வாலிபர்கள் சாரதியை எச்சரித்துவிட்டு ஒடித் தலைமறைவாகினர்களாம்.

சாரதி இச்சம்பவம்பற்றி உடனடியாக காங்கேசன் துறைப் பொலிஸில் புகார் செய்தார். (மாவை-நி)

## ஜி.ஜி. நினைவுதினக் கூட்டம் பெப்ரவரி 9-ல் நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

அமரர் ஜி ஜி பொன்னம்பலத்தின் முதலாவது ஆண்டு நினைவுதினக் கூட்டம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவில் பெப்ரவரி 9 ம் திகதி நடைபெறவிருக்கிறது.

நல்லூர் கல்யாண மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில், கூட்டணி எம். பிக்கள் உரையாற்றுவார்கள்.

அமரர் ஜி. ஜி. யின் வாழ்க்கை வரலாறுகொண்ட கவிதைகளும், அனுதாபச் செய்திகளும் கொண்ட மலர் ஒன்று வெளியிடுவதற்கும் ஆலோசிக்கப்பட்டு இதற்கென குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடந்த கூட்டத்தில், மேற்கண்ட முடிவுகள் எடுக்கப் பட்டுள்ளது. [க]

## 1977 ஆகஸ்ட் கலவர

# நஷ்டஈடு வழக்கு: 3-ம் திகதி விசாரணை

[யாழ்ப்பாணம்]

ஆகஸ்ட் கலவர நஷ்டஈடு வழக்கில், எதிர்மனுதாரர்கள் பதில் அணைப்பதற்கு, பெப்ரவரி 3 ம் தேதிவரை விசாரணை பின்போடப்பட்டுள்ளது

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் கலவரத்தில் பலியான ஆனந்தவேலின் தந்தை ராஜகோபால் சண்முகராசா, 50,000 ரூபா நஷ்டஈடு கோரி சட்டமா அதிபருக்கும் மற்றும் 7 பேருக்கும் எதிராக மனு தாக்கல் செய்துள்ளார்.

மற்றொரு வழக்கில் கலவரத்தில் பலியான பாக்கியராசாவின் தந்தை பொன்னம்பலம் பாலசிங்கம், ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி, சட்டமா அதிபருக்கும் வேறு 6 பேருக்கும் எதிராக மனு தாக்கல் செய்துள்ளார்.

மனுதார் சார்பில் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். கனகரத்தினம் ஆஜரானார்.

## அதிபர் தெரிவுக்கான கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

21ந் திகதி நடைபெறவிருந்த நாலாம், ஐந்தாந் தர அதிபர்களுக்கான தெரிவுப் பரீட்சை இம்மாதம் 27ந் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கமும் யாழ். மாவட்டக் கல்விக் காரியாலயமும் இணைந்து கடந்த வாரம் நடத்திய அதிபர் தெரிவுக்கான கருத்தரங்கு இதனால் மீண்டும் யாழ். மத்திய கல்லூரியில் 22, 23ந் திகதிகளில் நடைபெறவுள்ளது. [செ

## இயக்குநர் சபை உறுப்பினர்கள் சிபார்சு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டைத்தொகுதியில் உள்ள காரைநகர், பண்டத்தரிப்பு, சங்கானை ஆகிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான புதிய இயக்குநர் சபை உறுப்பினர்களை வட்டுக்கோட்டை எம். பி. திரு தா. திருநாவுக்கரசு சிபாரிசுசெய்து கூட்டுறவுத் துறை அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

காரைநகர், பண்டத்தரிப்புப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் சபை விரைவில் இயங்கவிருக்கிறதென்றும், தற்போது சங்கானைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும் விசாரணை முடிவடைந்த பின்னரே அச்சங்கத்தின் புதிய இயக்குநர் சபை இயங்குமென்றும் வட்டுக்கோட்டை எம். பி. தெரிவித்தார்.

உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத்தின் வேண்டுகோளுக்கிணங்கவே இச்சிபார்சுப் பட்டியல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (அ]

## 'சொக்க'னின் நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

''சொக்கனின் ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி', நூல் வெளியீட்டு விழாவும், கலைநிகழ்ச்சியும் இம்மாதம் 21-ந் திகதி மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவிற்கு இலங்கைப் பல்கலைகழக யாழ் வளாகத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமை தாங்குவார். வடமாநில கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் மங்கல விளக்கேற்ற, வரவேற்புரையை திரு. அ. பொன்னம்பலம் நிகழ்த்துவார்.

வெளியீட்டுரையை பயிலங்கூடலூர் பி. நடராசனும், நூற்பிரதிகளை கலையரசு சு. சொர்ணலிங்கம், நாட்டுக்கூத்து கலாநிதி ம. ஜோசெப்பும் பெறுவர். ஆய்வுரையை கலாநிதி அ. சண்முகதாஸ் வழங்குவார்

கலைநிகழ்ச்சிகளுக்கு எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் அதிபர் சி. தியாகராஜா தலைமை தாங்குவார். கலைநிகழ்ச்சிகளாக ''காமதகனம்'' என்ற நாட்டிய நாடகமும், ''கண்டியரசன்'' நாட்டுக்கூத்து, ''பூனைகள்'' நாடகம் ஆகியன இடம் பெறும். ]செ]

## வவனியா உதவிப் பொலிஸ் அதிபர்

[வவனியா]

வவனியா உதவிப் பொலிஸ் அதிபராக திரு. அசோகா சமரக்கோன் பொறுப்பேற்றுள்ளார். இவர் நுகேகொடையிலிருந்து இடமாற்றம் பெற்று வந்துள்ளார். [அ]

## மும்மொழி—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளில் தமிழ்மொழியைக் கற்க சிங்கள மக்கள் விரும்புவார்களா? அவர்கள் தமிழைப் படிக்கவேண்டிய அவசியம் ஏதும் உண்டா? சமீபத்தில் 'தினகர' என்னும் சிங்களப் பத்திரிகை, மும்மொழித் திட்டத்தின் மூலம் 22 ஆயிரம் தமிழ் ஆசிரியர்கள் சிங்களப் பாடசாலைகளில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும், தமிழ் மொழியைப் புகுத்தும் ஆரம்ப நடவடிக்கை இது என்றும் பிரசாரம் செய்ய ஆரம்பித்துள்ளது. இதனால் தான் நான்; தேசிய பேரவையில், மும்மொழித் திட்டத்தை 'குதிரைக்கு முன்னால் வண்டியைப் பூட்டுவது போன்றதொரு திட்டம்'' என்று கூறி எதிர்ப்புத் தெரிவித்தேன்.

### பாதகமான நிலையே உருவாகும்

''சிங்களம் தெரியாத காரணத்தினால் எவரும் பாதிக்கப் படமாட்டார்கள் என்று பிரதமர் தெரிவித்துள்ளார். ஆனால் தமிழ் மக்களுக்கு தனிச் சிங்களத்தில் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. அதை வாசிக்க யாரிடமாவது கொண்டுபோகவேண்டியுள்ளது. தமிழ் அரச ஊழியர்கள் மூன்று வருடத்திற்குள் சிங்களத் தேர்ச்சியடையாவிட்டால் பதவி உயர்வு, சம்பள உயர்வு எதுவுமில்லாது பதவியும் பறிபோய்விடுகின்றது. தமிழ்ப் பிரதேசங்களில்மட்டும் கடமையாற்றும் சிறு சேவை ஊழியர்கள்கூட சிங்களத் தேர்ச்சி பெறவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மும்மொழித் திட்டத்தை தமிழ் மக்கள் ஏற்று சிங்களத்தை ஒரு பாடமாகக் கற்பதினால் பலவிதத்தினாலும் பாதகமான நிலை தான் உருவாகும் தற்போது தமிழ் மொழிக் கல்வி மூலம் அரச சேவையில் சேரும்வாய்ப்பும் இல்லாதுபோகும் பரீட்சைகளில் சிங்கள மொழி கட்டாய பாடமாக்கப்படக்கூடும். ஆகவே, யானை தன்னைக் கட்டுவதற்கு தானே சங்கிலி எடுத்துக் கொடுப்பதைப்போல, தமிழ்ப் பெற்றோர் இந்த மும்மொழித் திட்டத்தில் ஏமாந்து விடாது, தமது இலட்சியத்தில் என்றும் உறுதியாக இருக்க வேண்டும்.''

யாழ். ஆயர் வண. டாக்டர் தியோகுப்பிள்ளை, வி. பொன்னம்பலம், சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு, காங்கேசன் துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. எஸ். பி. சிவஞானசுந்தரம் ஆகியோர் இவ்விழாவில் உரையாற்றினர். [பண். நிரு.]

## யாழ். விசேஷ—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பிரிவின்கீழ் இயங்கும்.

இதற்கென இப்பிரிவின்கீழ் கைவிரல் அடையாள நிபுணர் பிரிவு ஒன்று யாழ்ப்பாணத்தில் புதிதாக இயங்கவிருக்கிறது

இத்துப்புத்துலக்கும் பிரிவில் கடமையாற்றும் பொலிஸார் விசேட பயிற்சி பெற்றுள்ள காரணத்தினால் இடமாற்றம் செய்யப்படும்போது நாட்டிலுள்ள மற்றும் துப்புத்துலக்கும் பிரிவுகளுக்கே செல்வார்கள் என்றும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (க)

## பங்கீடு—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கென ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியில் உத்தியோகத்தர்களும் மேற்பார்வையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கூப்பன் பரிசிலனைக்கு வசதியாக இவ்வாரம் இம்மாதத்திற்குரிய இருவாரப் பங்கீட்டு அரிசியையும். சீனியையும் பங்கீட்டுப்பொருட்களையும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## வலி வடக்கு—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பார்வையாளராகக் கடமையாற்றுவார்கள்.

300 ரூபாவிற்குமேல் வருமானம் உள்ளவர்களுக்கு பங்கீட்டுப் புத்தகத்தை ரத்துச் செய்வதுபற்றியும். 300 ரூபாவிற்குக் கீழ் வருமானம் உள்ளவர்களுக்கு புதிய கூப்பன் வழங்குவது பற்றியும் பயிற்சியளிக்கப்பட்டது [க]

## கிளிநொச்சியில் பொங்கல் விழா

[பரந்தன்]

கிளிநொச்சியில் நடைபெறவிருந்த உழவர்தினவிழா எதிர்வரும் 24ந் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது.

தைப்பூசத் தினத்தன்று நடைபெறவிருக்கும் இவ்விழாவில் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள், நாடகப் போட்டிகள், சிலம்படி, ஜல்லிக்கட்டு, கராட்டி, மல்யுத்தம் விநோத உடைப்போட்டி, அலங்கார ஊர்திகள் பவனி என்பன இடம்பெறவுள்ளன. இப்போட்டிகளுக்கான முடிவு திகதியும் இம்மாதம் 20ந் திகதிவரை பின்போடப்பட்டுள்ளது. [அ]


## மரண அறிவித்தல்

### முத்துராஜா பாக்கியம்

திருமதி மு. பாக்கியம் காலமானார். இவர் காலஞ்சென்ற முத்துராஜா கராஜ் உரிமையாளரின் அன்பு மனைவியும், திரு. வரதராசா, கனகராசா [குட்டி] ஜெயராசா, புஷ்பராசா [ஈரான்], இந்துராணி, சற்குணராணி, கேந்திரராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. பத்மநாதன் ஜே.பி., சண்முகலிங்கம், சிவநாதன், திருமதி சிவபாலசிங்கம், திருமதி திருஞானசம்பந்தர், மரக் கூட்டுத்தாபன ஒப்பந்தகாரர் திரு. சதாசிவத்தின் புத்திரன் மகேந்திரராசா, தவமணிதேவி பங்கஜலெட்சுமி ஆகியோரின் மாமியாரும், திருமதி கைலாசபிள்ளை, திருமதி சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள், அராலி வீதி, ஓட்டுமடம், 20ம் இலக்க இல்லத்திலிருந்து 18-1-78 புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்குக் கோம்பயன்மணல் மயானத்திற்குத் தகனக் கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம். முத்துராஜா குடும்பத்தினர். 8241

## மரண அறிவித்தல்

### ஆ. க. ஆறுமுகம்தம்பி

கொக்குவில் ஆ. கந்தையாவின் சிரேஷ்ட புத்திரனும், இளையப்பாவின் மருமகனும், மருதானைப் புகையிரதநிலைய அத்தியட்சகரும், ஆசிரியை கமலாம்பிகையின் கணவருமான ஆ. க. ஆறுமுகம்தம்பி காலமானார். இறுதிச் சடங்குகள் கொக்குவில் மயானத்தில் இன்று 4-30க்கு நடைபெறும்.. 274, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 8240


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.